Kanchipuram District

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## வணிகவியல்

நேரம் : 3.00 மணி | பகுதி - அ | மதிப்பெண்கள் : 90

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20 x 1 = 20

1. அன்பு மற்றும் பாசம் அல்லது சமூக சேவை உள்நோக்கம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்
   அ) பொருளாதார செயல்பாடுகள் ஆ) பண நடவடிக்கைகள்
   இ) பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் ஈ) நிதி நடவடிக்கைகள்
2. இரும்பிலிருந்து தாதுக்களை பிரித்தெடுக்கும் தொழிற்சாலை என்பது
   அ) கட்டுமான தொழில்கள் ஆ) தயாரிப்பு தொழில்கள்
   இ) பிரித்தெடுக்கும் உற்பத்தி தொழில்கள் ஈ) மரபு சார் உற்பத்தி கொள்கைகள்
3. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது
   அ) ஒப்பந்தத்தால் ஆ) கூட்டாளிகள் இடையே உறவு
   இ) அரசின் வழிகாட்டல் ஈ) நட்பின் அடிப்படையில்
4. கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்றம் அல்லது மாநில சட்டமன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது
   அ) பட்டய சாசன நிறுமம் ஆ) அயல்நாட்டு நிறுமம் இ) அரசு நிறுமம் ஈ)சட்டமுறை நிறுமம்
5. நுகர்வோர் கூட்டுறவு முதன் முதலாக வெற்றி பெற்றது
   அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா இ) சுவிஸ் ஈ) இந்தியா
6. பொதுத்துறை நிறுவனத்தின் மிகப் பழமையான அமைப்பு
   அ) பொதுத்துறை நிறுவனம் ஆ) துறைவாரி அமைப்பு
   இ) பன்னாட்டு நிறுவனம் ஈ) சட்டமுறை நிறுவனம்
7. வங்கியர்கள் பணத்தை கையாள்பவர்கள் மட்டுமல்ல _______ க்கு வழிகாட்டுப்வர்கள் ஆகவும் இருக்கிறார்கள்.
   அ) பொருளாதார வளர்ச்சி ஆ) வர்த்தக வளர்ச்சி இ) தொழில் வளர்ச்சி ஈ) சேவை வளர்ச்சி
8. வெளிநாட்டு வங்கிகள் தங்கள் செயல்பாடுகளை இந்தியாவில் ஆரம்பித்த ஆண்டு
   அ) 1978 ஆ) 1979 இ) 1980 ஈ) 1981
9. எந்த வகையான கணக்கு குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட சில தொகையை செலுத்த வேண்டியது கட்டாயம்?
   அ) சேமிப்பு கணக்கு ஆ) நிலையான வைப்பு
   இ) நடப்பு வைப்புத் தொகை ஈ) தொடர் வைப்பு
10. சென்னை நகரில் டிராம் வண்டிகள் போக்குவரத்து _______ ஆம் ஆண்டு வரை செயல்பாட்டில் இருந்தது
    அ) 1930 ஆ) 1931 இ) 1933 ஈ) 1935
11. _______ வங்கியில் இருந்து நிதி உதவி பெறுவதற்காக இணைப்பாக வழங்கப்பட்டது.
    அ) துறைமுக சான்றாணை ஆ) பண்டகக்காப்பாளர் இரசீது
    இ) துறைமுக இரசீது ஈ) பண்டக சான்றாணை
12. காப்பீட்டின் அடிப்படை கோட்பாடு _______ ஆகும்.
    அ) மிக்க நம்பிக்கை ஆ) கூட்டுறவு இ)பகர உரிமை ஈ) அண்மை காரணம்
13. பின்வருவனவற்றில் எது ஊழியர்களின் சமூக பொறுப்புணர்வு?
    அ) நியாயமான ஊதியம் ஆ) சரியான வசதிகள் இ) சமூக பாதுகாப்பு ஈ) சுரண்டல்
14. கடன் பத்திரதாரர்கள் ஒரு நிலையான _______ விகிதம் பெற தகுதி உடையவர்கள்.
    அ) பங்காதாயம் ஆ) இலாபம் இ) வட்டி ஈ) இவை எதுவும் இல்லை
15. அயல்நாட்டு பத்திர வெளியீட்டு உரிமம் தரும் ஆவணம்
    அ) உரிமைச் சான்றிதழ் ஆ) வைப்பு இரசீது இ) உரிமை இரசீது ஈ) இவை எதுவும் இல்லை
16. வாங்கு உரையும் விற்போரையும் ஒருங்கிணைக்கும் பணியினை மேற்கொள்பவர்
    அ) தரகர் ஆ) கழிவு முகவர் இ) விற்பனை முகவர் ஈ) இருப்பு வைத்திருப்பவர்
17. நாடுகளுக்கிடையே சரக்குகள் மற்றும் சேவைகள் மற்றும் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டால் அது _______.
    அ) பன்னாட்டு வியாபாரம் ஆ) பன்னாட்டு வணிகம்
    இ) மறு ஏற்றுமதி வியாபாரம் ஈ) உள்நாட்டு வியாபாரம்

18. இளவருடன் செய்யும் ஒப்பந்தம்
அ) செல்தகு ஒப்பந்தம் ஆ) செல்லாத ஒப்பந்தம்
இ) தவிர்த்தது ஒப்பந்தம் ஈ) மற்றொரு தரப்பினரின் விருப்பத்தின் பேரில்
19. GST இன் விரிவாக்கம்
அ) சரக்கு மற்றும் அளிப்பு வரி ஆ) அரசு விற்பனை வரி
இ) சரக்கு மற்றும் சேவை வரி ஈ). பொது விற்பனை வரி
20. நாணய உறுதி கடிதம் ஏற்பாடு செய்பவர் யார்?
அ) ஏற்றுமதியாளர் ஆ) இறக்குமதியாளர் இ) உற்பத்தியாளர் ஈ) நுகர்வோர்.

பகுதி - ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா) 7 x 2 = 14

21. பண்டமாற்று முறை என்றால் என்ன?
22. பட்டய சாசன நிறுமம் என்றால் என்ன?
23. மறு ஏற்றுமதி என்றால் என்ன?
24. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?
25. தானியங்கி பணம் வழங்கும் அட்டை (ATM) பற்றி நீவீர் அறிவது யாது?
26. பண்டக காப்பகங்கள் என்றால் என்ன?
27. தனி உரிமம் பெற்றவர் என்பவர் யார்?
28. தரகர் என்பவர் யார்
29. மறைமுக வரி என்றால் என்ன?
30. நிறுவன நற்பெயருக்காகவும் மரியாதைக்காகவும் தனது பெயரை மட்டும் கடனாக வழங்கும் கூட்டாளி யார்? அவர் நிறுவனம் வாங்கிய கடனுக்கு பொறுப்பேற்க வேண்டுமா?

பகுதி - இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21

31. வரையறு பொறுப்பு என்றால் என்ன?
32. ஒப்பந்தத்தை யார் நிறைவேற்றலாம்?
33. கப்பல் இரசீது என்றால் என்ன?
34. மருவூர்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் விளக்குக?
35. இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி இறக்குமதி மூன்றினை குறிப்பிடுக.
36. அந்நியச் செலாவணி மாற்றுப் பத்திரம் என்றால் என்ன?
37. வீட்டு வசதி கூட்டுறவு பற்றி சிறு குறிப்பு வரைக?
38. ஐவகை வருமான தலைப்புகளை வரிசைப்படுத்துக.
39. உண்மை நேர மொத்த தீர்வக அமைப்பு (RTGS) பற்றி சிறு குறிப்பு வரைக.
40. கடத்தல் பொருட்கள் வாங்க அல்லது விற்க மேற்கொள்ளும் ஒப்பந்தம் எவ்வகையான ஒப்பந்தம்? விளக்குக?.

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

41. அ) உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகளில் ஐந்தினை விவரி.
*( அல்லது )*
ஆ) வணிகத்தின் பல்வேறு தடைகளை விளக்குக.
42. அ) பண்டக காப்பகங்களில் வகைகளை விளக்குக.(ஏதேனும் ஐந்து மட்டும்) *( அல்லது )*
ஆ) சரக்கு மற்றும் சேவை வரியின் வகைகளை விளக்குக.
43. அ) காப்பீட்டின் கோட்பாடுகளை விளக்குக. *(அல்லது)*
ஆ) துறைவாரி அமைப்புகளின் நன்மைகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து மட்டும்)
44. அ) பன்னாட்டு வணிகத்தின் நன்மைகள் யாவை? *( அல்லது )*
ஆ) சுய உதவி குழுக்களின் நோக்கங்கள் யாவை?
45. அ) ஏதேனும் ஐந்து தனி நபர் முதலீட்டு வழிகளை விளக்கு. *(அல்லது)*
ஆ) நேரடி வரிக்கும், மறைமுக வரிக்கும் உள்ள வேறுபாடுகள் ஐந்தினை விவரி.
46. அ) அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள உள்ளடக்கங்கள் யாவை? *(அல்லது)*
ஆ) உலகளாவிய வைப்பு இரசீது அமெரிக்க வைப்பு இரசீது வேறுபாடு தருக?
47. அ) தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் ஐந்து மட்டும்) *(அல்லது)*
ஆ) போக்குவரத்தின் வகைகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து மட்டும்)

******